**தலைப்பு 207 – தொல் பொருளியல் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டு அந் திக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) இவ்வறிக்கையின் 1.6.2 பந்தியில் உட்படுத்தப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய மூலதன செலவுகளின் கீழ் மத்திய கலாச்சார நிதியம், அரச திணைக்களங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் துறையினர் ஆகிய வழிகளின் மூலம் கிடைத்திருந்த பணத்தை கொண்டு ஆய்வுகள், அகழ்தல்கள், பாதுகாத்தல் செயற்திட்ட அலுவல்களுக்காக மீளாய்வாண்டின் போது மேற் கொள்ளப்பட்டிருந்த ரூபா 71,488,590 தொகை நிதியல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை யினரிடம் கிடைக்கும் ஆய்வுகள், அகழ்வுகள், பாதுகாப்புச் செயற் திட்டங்களுக்கான மூலதனச் செலவுகள் நிதி அல்லாத அசைவு அறிக்கையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உட்படுத்தாமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக உள்ளகக் கணக்காய்விற்கு சாட்டுவதற்கும் தகைமை யுடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு சாட்டுவதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான பரம்பரையான சொத்துக்கள் என புராதன கட்டிடங்கள் மற்றும் தூபிகள், தொல்பொருளியல் இடங்கள் பாதுகாக்கப்பட்ட இடங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் மற்றும் கலைப் படைப்புக்கள் அடங்குவதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு தத்துவங்களின் படி இந்த விலை மதிப்பிட முடியாத சொத்துக்களின் பெயரளவில் பெறுமதியினை கணக்கீடு செய்தல் அல்லது நிதிக்கூற்றுக் களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான பெறுமதி மதிப்பிட முடியாத பரம்பரையான சொத்துக் களின் பெறுமதியினை பெயரளவிலான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் அல்லது வெளிப்படுத்துதல் மேற் கொள்ளப்பட வேண்டும். | பரம்பரையான சொத்துக்களின் பழைமைப் பெறுமதி அல்லது பெயரளவில் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக அரச பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் அல்லது அறிஞர் குழு ஒன்றின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ள துடன் அது தொடர்பாக செயற்படுத்துவதற்கு பொருத்தமான அலுவலர் ஒருவரை நியமனம் செய்வதற்கும் அதன் பின்னர் கிடைக்கும் பெயரளவில் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கின் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத் தொகை ரூபா 102,248,110 தொகையாக இருந்த போதிலும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 102,939,344 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 691,234 தொகைக்கான வித்தியாசம் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் இணக்கஞ் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசாங்க உத்தியோகத் தர்களுக்கான முற்பணக் கணக்கின் தனிப்பட்ட மீதிகளின் வகைப் படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி இடையே காணப் பட்ட வித்தியாசத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலம் முதல் காணப்படும் தீர்க்கப்பட வேண்டிய இவ் வித்தியாசம் தொடர்பாக குறித்த கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ் வித்தியாசத்தை இனங் காணப்பதற்காக குறித்த கவனம் செலுத்தப்பட்டு மேலதிக உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தி இனங் காணப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்பிரகாரம் மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (நியமச் செலவுகள்) பேரேடு | | |
| | நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (நியம செலவுகள்) பேரேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதியாக உள்ள நிதிஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பட்ட பொறுப்புக் களை காட்டக்கூடிய விதமாக பதிவேடு பேணப்பட வேண்டும். | நி.பி. 447 பிரகாரம் மீதியாக உள்ள நிதிஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பட்ட பொறுப்புக்கள் எவை என குறிப்பிடுவதற்கு உரிய விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (ஆ) | பொறுப்புக்கள் மீதான பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் மீதான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் தொடர்ச்சியாக பரிசோதனை மேற் கொள்ளக்கூடிய விதமாக பொறுப்புக்களை, பொறுப்புக்கள் பதிவேடு ஒன்றில் பதிவு செய்யப்பட வேண்டும். | நடைமுறை ஆண்டில் இருந்து குறிப்பிட்ட செலுத்த வேண்டிய பொறுப்புக்களை தாமதம் இன்றி செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு ள்ளதுடன் இனிமேல் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் குறைவடையும் என எதிபார்க்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 110 இன் கீழ் காட்டப் பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் இழப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தாங்கள் சுட்டிக்காட்டியவாறு இழப்புக்கள் பதிவேடொன்று ஆரம்பிப்பதற்கும் அதனை பேணுவதற்கும் நட்டங்கள் இழப்புக்கள் அறிவிக்கப்பட்ட துடன் அப் பதிவேட்டில் உட்படுத்துவதற்கும் அதன் பிரகாரம் இந்தப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்படுவதற்கும் மேலும் வருடாந்த பண்டக் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப் படும் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் உறுதிப்படுத்தும் அறிக்கை கிடைத்தவுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பதிவு செய்யப்பட்டது. |
| (ஈ) | காசோலைகள் பெறுதல் மற்றும் ஒப்படைத்தல் பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகளை ஒப்படைக்கும் பதிவேடொன்று முறைப் பிரகாரம் பேணப்பட்டி ருக்கவில்லை. | நிதிப் பிரகாரம் 451 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடு களின் பிரகாரம் ஜீ.ஏ.எம்.83 கொண்ட படிவத்தின் பிரகாரம் காசோலைகள் பெறுதல் மற்றும் ஒப்படைத்தல் பதிவு செய்வதற்கு இயலுமான முறையில் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ளவாறு GAM 83 கொண்ட படிவத்தை பெற்று அதற்கு பொறுத்தமான விதத்தில் தயாரித்து எதிர்காலத்தில் பேணி வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | பிணைப் பதிவேடு<br>-------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கக் கூடிய விதமான பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டு வர வேண்டும். | பிணைப் பதிவேடொன்று திறக்கப்பட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்காலத்தில் பொறுப்புச் சொல்ல வேண்டிய தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும். |
| (ஊ) | அரசாங்க உத்தியோகத்தர் களின் கடன் மற்றும் முற்பண பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | நிதிப் பிரமாணம் 502 மற்றும் 2017 ஜூலை 05 திகதிய 256/2017 இலக்கங் கொண்ட | நிதிப் பிரமாணம் 502 மற்றும் 2017 ஜூலை 05 திகதிய 256/2017 இலக்கங் கொண்ட | ஓய்வு பெறல், இறத்தல் சேவையை விட்டுச் செல்லல், சேவையை விட்டு நீக்கல் உத்தியோகத்தர் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| பொது நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வு பெறல், இறத்தல், சேவையை விட்டுச் செல்லல், சேவையை விட்டு நீக்கல் ஆகிய காரணங்கள் மீது சேவையில் இல்லாத ஊழியர் களின் நிலுவை கடன் மீதிகளை காட்டக் கூடிய கடன் பதிவேடு முறைப் பிரகாரம் பேணப்பட்டிருக்க வில்லை. | பொது நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிட்ட பதிவேடு முறைப் பிரகாரம் பேணப்பட வேண்டும். | இனிமேல் உட்படுத்த வேண்டிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் தற்போதைய சேவை நிலையம் நிரந்தர விலாசம், இணையின் பெயர் மற்றும் விலாசம், பிணையாளர்களின் விபரம் மற்றும் ஓய்வு பெறல் தகவல்கள் ஆகிய விபரங்களுடனான பதிவேடு பேணப்படுவதற்கும் இவ்வாறு நீண்ட காலமாக காணப்படும் கடன் மீதிகளை இனங் கண்டு நி.பி.502 இன் கீழ் தேவையான பதிவேடுகள் திறப்பதற்கும் கடன்மீதியை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் குறித்துக் கொள்ளப்பட்டது. |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்துதல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகர மான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப் பட்டு பேணப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப் படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக இடையிடையே மீளாய்வு செய்யப்பட்டு அதன் படி முறைமை வெற்றிகரமாக நடாத்தப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற் கொள்ளப்பட வேண்டியிருந்த துடன், அம் மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு மேற் கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட கால பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலழித்தல் நேரிடுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டி இருந்ததுடன் அறிக்கையில் 3.4 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக் களுக்கு பதில் அளித்திருக்க வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு செய்பணி உரியவாறு செயற்படுத்துவதற்காக பயன்தரு நடைமுறை ஒன்று காணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும், அத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு செய்பணி உரியவாறு செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறை ஒன்று காணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | 1951 இன் 28 ஆம் இலக்க அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் சட்டத்தின் 2 ஆம் பிரிவு | அச்சிடப்படும் அனைத்து புத்தகங்களினதும், கிரந்தங்களினதும் 04 பிரதிகளை பாதுகாப்பதற்காக தேசிய சுவடிக் காப்பாளர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருந்த போதிலும் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டிருந்த களனி விஹாரை சுவரோவிய 02 கிரந்தங்களின் பிரதிகள் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அச்சிடப்படும் அனைத்து கிரந்தங்களின் 4 பிரதிகள் பாதுகாப்பதற்காக தேசிய சுவடிக் காப்பாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | அச்சிடப்படும் அனைத்து புத்தகங்களும் எதிர்காலத்தில் சுவடிக் காப்பாளர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு மற்றும் களனி விஹாரை சுவரோவியங்கள் இரண்டு கிரந்தங்களின் பிரதிகள் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXXIII பிரிவுகள் 1.1 மற்றும் 1.4 | உடன்படிக்கைகளின் சட்டரீதியான தன்மை தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளா மல் ஆய்வுகள் மற்றும் அகழ்வுகள் செயற்திட்ட அலுவல்களுக்காக வெளித்தரப்பினருடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட் டிருந்தது. | உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னர் அவற்றின் சட்டரீதியான தன்மை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தருக்கு இவ்வாறு உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி ஆலோசனை வழங்கப்படவுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | 2019 ஆண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய் வாண்டிற்கான பண்டக் கணிப்பீடு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தாங்கள் சுட்டிக் காட்டிய வாறு இதன் அவலுவல் களை பூர்த்தி செய்யுமாறு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தப்பட்டது. |
| (ஈ) | 1940 இன் 9 ஆம் இலக்க தொல் பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் அதனோடு தொடர்பு டைய 1572/4 இலக்க 2008 ஒக்தோபர் 20 திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி | காத்தான்குடி முஸ்லிங்களின் உரிமை நூதனசாலையின் நூதனப் பொருட்கள் என கணிக்க முடியாத பண்டங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்த தென அவதானிக்கப் பட்டன. உதா:- அத் தொல்பொருளுக்கு உரிய காலவரையறை ஆகிய தகவல்கள் காட்டப்பட்டிருக்க வில்லை. | தொல்பொருள் களின் காலப் பகுதி தொடர்பாக விஞ்ஞானரீதியான காரணிகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்ட பின்னர் குறிப்பிட்ட தொல் பொருள் காட்சிப் படுத்தப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 112.4 மில்லின் தொகை காணப்பட்ட துடன் மொத்த உள்ளவாறான செலவு ரூபா 85 மில்லியன் தொகையாக காணப்பட்டமை யால் மொத்த தேறிய ஏற்பாடு களில் ரூபா 27.4 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது மொத்த ஏற்பாடுகளில் 24.5 சதவீதமாகும். | மூலதனச் செலவு எனப்படுவது அபிவிருத்தி அலுவல்களுக்கான செலவுகள் என்றமையால் அத் தொகையை உச்ச மட்டத்தில் பயன்படுத்த வேண்டும். | திறைசேரியினால் இடையிடையே விதிக்கப்பட்ட செலவு வரையறைகள் மீது இவ்வாறு சேமிப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 06 செலவு விடயங்கள் தொடர்பான பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ஆகிய ரூபா 2,782,506 இற்கான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 6 பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ஆகிய ரூபா 2,782,506 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்காக குறித்துக்கொண்டேன். |

### 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம் வழங்கியிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2011 பெப்ரவரி 02 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது தொல்பொருளியல் இடங்களை ஆய்வுகள், அகழ்தல்கள், பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்வதற்காக மத்திய கலாச்சார நிதியத்தினால் உழைக்கும் வருமானத்தில் 25 சதவீத அளவு திணைக்களத்திற்கு வருடாந்தம் வழங்குவதற்கு | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை மத்திய கலாச்சார நிதியத்தில் இருந்து செயற் திட்டங் களுக்காக வழங்கியிருந்த நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,059 மில்லியன் | எதிர்பார்த்த நிதி ஏற்பாடுகளுக்காக வழங்கப் படாமையால் இதனை பாதித்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தேசிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியம் ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்காக போதியளவு செயற்திட்டங்களை இனங்கண்டு முறையான நடைமுறைப்படி செயற்பட்டிருக்கவில்லை. எனினும் 2016 ஆண்டின் போது ரூபா 115 மில்லியன் தொகை 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 233 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 370 மில்லியன் தொகை மற்றும் 2019 ஆண்டின் போது ரூபா 341 மில்லியன் தொகை ஆக செயற் திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகள் மத்திய கலாச்சார நிதியத்தில் இருந்து திணைக்களத் திற்கு கிடைத்திருந்தது. | தொகை அவற்றிற்கான செயற்திட்டங்களை இனங்கண்டு முறைப் படி பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, இலங்கை சுற்றுலா சபை மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ரூபா 68.7 மில்லியன் ஏற்பாடுகளின் மீது அமுல்நடத்தப்பட்ட 07 செயற் திட்டங்களின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றல் ரூபா 2.5 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அவை 4 சதவீதமாகக் காணப்பட்டது. | பல்வேறு நிறுவனங் களின் மூலம் செயற் திட்டங்களுக்காக வழங்கப்படும் ஏற்பாடுகளை முறையான திட்டமொன்றின் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். | இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க திட்டமிடப் பட வேண்டும் என பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. |

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 18 செயற்திட்ட அலுவல்களுக்காக கிடைத்திருந்த ஏற்பாடுகளில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதியாக இருந்த ரூபா 8,559,280 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 செயற்திட்டங்களின் மீதியாகிய ரூபா 8,559,280 இற்கான மீதியை தீர்ப்பதற்கு குறித்துக் கொண்டேன். | தீர்ப்பதற்காக குறித்துக் கொண்டேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொல்பொருளியல் இடங்களை அகழ்தல், பாதுகாத்தல், திருத்தம் மேற்கொள்ளல் ஆகிய 19 செயற்திட்டங்களுக்காக அரசாங்க திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து மானியமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை காலப்பகுதியில் கிடைத்திருந்த நிதியங்களில் இருந்து செயற்திட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்ட பின்னர் மீதியாக இருந்த ரூபா 11,166,011 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 19 செயற் திட்டங்களை செயற் படுத்திய பின்னர் மீதியாகவுள்ள ரூபா 11,166,011 தொகையினை விரைவாக தீர்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பதற்காக குறித்துக் கொண்டேன். |
| (இ) | தொல்பொருளியல் சார் இடங்களில் நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்த வேலைகள் 5 இற்கான கொடுப்பனவுகளில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 388,375 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலமாக தடுத்து வைக்கப்பட்டி ருந்தது. | தொல்பொருளியல் சார் நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்த வேலைகள் 5 தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 388,375 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பதற்காக குறித்துக் கொண்டேன். |

## 2.5 வங்கிக் கணக்குகள் நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 02 நடைமுறைக் கணக்குகள் வடமத்திய மற்றும் மத்திய பிராந்திய தொல்பொருளியல் அலுவலகங்களின் கொடுக்கல் வாங்கல்கள் நடாத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டு 11 வருடங் களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் பிராந்திய அலுவலகங்களின் கணக்காளர் ஒருவர் இன்மை காரணமாக நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | வடமத்திய மற்றும் மத்திய பிராந்திய அலுவலகங்களில் கணக்காளர் ஒருவர் இன்றி பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்குகளை மூடிவிடுவதற்கு அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். | இந்தத் திணைக்களத்திற்காக பி.க. மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த கணக்காளர் பதவிகள் போதியளவினதான காணப் படாமையால் 2018.06.25 திகதி புதிய பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டது. அவ்வாறாயினும் திணைக் களத்துள் காணப்படும் கடமையின் எண்ணிக்கையின் படி அப் பதவியை வகிக்கும் உத்தியோகத்தரை பிராந்திய அலுவலகத்திற்கு ஈடுபடுத்து வதற்கு முடியாமல் இருப்பதால் கணக்காளர் பதவியின் எண்ணிக்கை கவனத்தில் எடுத்து இந்த நடைமுறைக் கணக்கு பேணப்படுவது தொடர்பாக கொள்கைசார் தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மக்கள் வங்கியில் மொனறாகலை கிளையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கை ஆக்கபூர்வமாக செயற் படுத்தாமையால் 2015 திசெம்பர் 31 திகதியளவில் அக் கணக்கு செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன் 2015 ஒக்டோபர் 23 திகதிய 3/2015 இலக்கங் கொண்ட திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அந்தக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மக்கள் வங்கி மொனறாகலை கிளையில் காணப் படும் செயற்படாத கணக்கு இலக்கம் 3/2015 இலக்கங் கொண்ட திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மக்கள் வங்கியின் மொனறாகலை கிளையில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு நன்மை நாடுவோரினால் சமயப்பற்றுடன் வழங்கப்படும் நன்கொடைகளினால் செயற் படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட நன்கொடை வழங்கப்படுவோரினால் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அவர்களின் விருப்பப்படி கிடைக்கும் உண்டியல் நிதியம் போதியளவாக காணப்படின் செயற்படுத்தப் படும். |
| (இ) | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப் படாத கூட்டுத்தொகை ரூபா 219,325 தொகைக்கான திம்பிரிகஸ்யாய கிளையின் 52 காசோலைகள் மற்றும் கண்டி கிளையின் 21 காசோலைகள் 07 மாதம் முதல் 52 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 396(ஈ) ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் படி செயற்பட வேண்டும். | கொடுப்பனவுக்காக சமர்ப்பிக் கப்படாத காசோகைள் தொடர்பாக பெறுவோனுக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கும் பதில் காசோலை வழங்குவதற்கு அல்லது அவர்கள் உரிய பதில் அனுப்பாவிடின் கொடுப்பனவு இடைநிறுத்தி அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் காணப்படும் நடைமுறைக் கணக்கு தொடர்பாக விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருக்காததுடன் அக் கணக்கு மூடப்பட்டிருந்தால் அது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை கணக்கு மீதி நிதிக் கூற்றுக்கள் வெளிப் படுத்துதல் அதனை மூடியிருந்தால் அவ் விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு தொடர்பாக யாழ்ப்பாண பிராந்திய உதவிப் பணிப்பாளரிடம் வினவி கிடைக்கும் பதிலின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சாட்டுதல்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டின் போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொல்பொருளியல் இடங்களின் ஆய்வுகள், அகழ்தல்கள், பாதுகாத்தல், பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி செய்தலுக்கான 194 செயற்திட்டங்களில் 2019 திசெம்பர் 31 திகதியளவில் 128 செயற்திட்டங்கள் தொடர்பாக நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி இருக்கவில்லை. | அமைச்சினால் செயற்திட்டங்களுக் காக வழங்கியிருந்த ஏற்பாடுகளை முறையான வேலைத் திட்டம் ஒன்றின் அடிப்படை யில் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018, 2019 ஆண்டுகளுக்கான செயற்திட்டங்கள் ஆரம்பிப் பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. கடன் அடிப்படையில் செயற்திட்டங் களை ஆரம்பம் செய்து அச் சிட்டைகளை தீர்க்கும் அடிப்படையில் செயற்படுத்து வதற்காகும். அவ்வாறு செயற்படும் போது மாகாண மட்டத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றமையால் அச் செயற்திட்டங்களின் சிறு எண்ணிக்கை மாத்திரம் செயற்படுத்தப்பட்டது. தற்போதும் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிலுவைச் சிட்டைகள் மேலும் செலுத்த வேண்டிக் காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்வேறு செயற்திட்டங்களுக் காக 2018 ஆண்டின் போது வழங்கியிருந்த மொத்த ஏற்பாடுகள் ரூபா 370.7 மில்லியன் தொகையில் 2019 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 68.5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவை மொத்த ஏற்பாடுகளில் 18 சதவீதம் ஆகும். | ஏற்பாடுகளை ஆண்டு பூராகவும் பரவக்கூடிய விதமாக பெற்றுக் கொண்டு அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | 2018, 2019 ஆண்டுகளின் போது ஜூலை மாதம் முதல் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமை யால் ஜூலை முதல் திசெம்பர் வரையான காலப் பகுதி மாத்திரம் செயற்படுத்து வதற்கு நேரிட்டதுடன் அக் காலப்பகுதி போதியளவாக காணப்படாமையால் தேவையான விளைவினை பெற்றுக் கொள்வதற்கும் இயலாமல் போனது. |
| (இ) | 2019 ஆண்டின் போது 239 செயற்திட்டங்களுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 27 செயற்திட்டங் களின் அலுவல்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், ஒதுக்கியிருந்த ரூபா 341 மில்லியன் ஏற்பாடுகளில் ரூபா 48 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 212 செயற் திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 0 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையான மிகவும் குறைந்த வீச்சில் காணப்பட்டது. | செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை உச்ச மட்ட அளவில் பயன்படுத்தக் கூடிய விதமான ஒரு திட்டமிட்ட அடிப்படையில் அலுவல்கள் செயற் படுத்தப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக செயற்திட்டங்களுக்குரிய தகவல்கள் இதற்குப் பொருந்தும் என குறிப்பிடுகின்றேன். |

## 3.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நெதிகம்வில பன்சல வளவில் ஆழமாக அகழ்வு விடயங்கள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் முறைப்பிரகாரம் பாதுகாப்பு மேற் கொள்ளாமையால் அகழ்வுகளின் மண் மற்றும் சேறுகளில் மூடப்பட்டு காணப்பட்டது. இலங்கையில் காணப்படும் இந்தப் பழமை சைத்தியல் கீழிறங்கள் மற்றும் சாய்தல் ஆகிய காரணங்களினால் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் விஹாரை வளவில் மண் மற்றும் கற்கள் குவிக்கப்பட்டிருத்தல், அகழ்வு காரணமாக ஆழமான இடங்கள் காணப்படுவதனால் யாத்திரி களுக்கு வசதியீனங்கள் மற்றும் விபத்து நிலைமைகள் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக பழமையான நிர்மாண வேலைகள் நிலத்திற்கு கீழ்பகுதியில் காணப்பட்டதை விட சேதம் விளைவிக்கும் நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | நெதிகம்வில பன்சல வளவில் அகழ்வு வேலைகளின் மூலம் ஏற்பட்டிருந்த மண் மற்றும் சேறுகளினால் மூடப்பட்டிருந்த தரை யினை பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு மற்றும் அவற்றின் பழைமை சொத்துக் களை பாதுகாக்கும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | பதில் அளித்திருக்கவில்லை. |
| (ஆ) | சிதுல் பவ்வ மகுல்மஹா விஹாரையின் அகழ்வின் மூலம் பரந்த நிலப்பரப்பில் தொல்பொருள் கள் கிடைக்கப்பட்டிருந்த போதிலும் முறையான பாதுகாப் பொன்று மேற்கொள்ளப்பட்டு பழமைவாய்ந்த தொல்பொருளியல் வளவினை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சிதுல் பவ்வ மகுல் மஹா விஹாரையின் அகழ்வு நடவடிக்கை களின் மூலம் கிடைக்கப் பெற்ற தொல்பொருள்கள் பாதுகாப்பதற்காக வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். | பதில் அளித்திருக்க வில்லை. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான அறிக்கையிடலின்றி களஞ்சியப்படுத்தியிருந்த அசையும் தொல்பொருட்களை ஆவணப்படுத்தும் கருமத்தை நிறைவேற்றுவதற்காக ரூபா 398,146 இற்கான மதிப்பீடு ஒன்றின் கீழ் 2018 ஏப்ரல் மாதம் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அசையும் தொல்பொருளை ஆவணப்படுத்தும் பௌதீக முன்னேற்றத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளித்திருக்கவில்லை. |

## 3.4 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2020 ஆகஸ்ட் 18 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு தாமதம் இன்றி பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங் களினாலும் செயற்பட வேண்டிக் காணப்படுவதுடன், மீளாய்வாண்டிற் கான திணைக்களத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக் கூடிய கருமங்களுக்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என தொடர்பாக அறிந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) ஏதேனும் கருமம் ஒன்றின் சரியான செயலாற்றலை அளவை செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று காணப்படல் அத்தியவசியமாக இருந்த போதிலும், திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களை நெருங்குதலை அளவை செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று ஏற்படுத்திக் கொள்வதற்கு முடியாதுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நிறை வேற்றிக் கொள்வது தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு தரவு முறைமை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு களுக்கு இணங்குகின்றேன். |
| (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நெருங்குவதற்காக தயாராகும் போது ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை. | இலக்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏனைய நிறுவனங் களுடன் இணைந்து செயற்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு களுக்கு இணங்குகின்றேன். |